# ஏன் சிறந்தவர்களிடமிருந்து பிறர் கற்றுக்கொள்ள வேண்டும்!

1990 ஆம் ஆண்டு, இந்தியாவில் தனிநபர் வருவாய் 368 டாலர்களாகவும், . சீனாவின் தனிநபர் வருவாய் 318 டாலர்களாகவும் ஏறத்தாழ ஒரே நிலையிலிருந்தது. 1970களின் பிற்பகுதியில் சீனா தாராளமயமாக்கலைத் தொடங்கியிருந்தாலும், அதன் வளர்ச்சி உச்சக் கட்டத்தை இன்னும் அடையவில்லை. ஆனால் அடுத்த 30+ ஆண்டுகள் மிகத் தெளிவாகச் சீனாவின் காலமாக இருந்தது. உலகளாவிய உற்பத்தி, வர்த்தகம் மற்றும் நாணய கையிறுப்புகளில் அதிகரித்த அந்நாட்டின் ஆதிக்கம், வரலாற்றிலே மிகப் பெரிய செல்வ வளத்தை உருவாக்கியது. சீனாவின் தனி நபர் வருமானம் $12,614 ஆக உயர்ந்துள்ளது, இது இந்தியாவின் தற்போதைய $2,480 என்ற நிலையை விட ஐந்து மடங்கு அதிகம்.

நாம் இப்போது ஒரு புதிய யுகத்தில் நுழைகிறோம், ஒரு தெளிவான கொள்கையும், சுறுசுறுப்பான நிலைப்பாடும் இந்தியாவுக்கு அடுத்த சில சகாப்தங்களில் வியக்கத்தக்க அளவிற்கு வளர்ச்சியையும் செழிப்பையும் ஒரு சீராக உருவாக்க முடியும். உலகளாவிய பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு அதன் முதுமை பெறும் மக்கள் தொகை காரணமாகவும், உலக முதலீட்டாளர்களும் வர்த்தக பங்களிப்பாளர்களும் சீனாவை மட்டுமே சார்ந்து இருப்பதால் உண்டாகும் ஆபத்தைத் தீவிரமாகக் குறைக்க முயல்வதாலும், இந்தியா உலக பொருளாதாரத்திற்கே ஒரு புதிய எந்திரமாக உருவாக முடியும்.

நாம் அதற்கான அத்தியாவசிய வளங்களை வைத்திருக்கிறோம் மிகப்பெரிய அளவிற்கு இளமைமிக்க மனித வளம் , உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பு திறன் (குறிப்பாக ஆங்கிலம் மூலம்) அத்தோடு உள்நாட்டு நுகர்வைப் பன்மடங்கு பெருக்கல் விளைவை உருவாக்கும் அளவிற்காக மக்கள் தொகை . நாட்டின் பொருளாதாரம் இல் இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டும் அளவிற்கு நமது தனிநபர் உற்பத்தித் திறனை உருவாக்க, நாம் ஒருங்கிணைந்த உலக சந்தையின் தேவைக்குப் பொருத்தக் கூடிய திறன் பயிற்சியைக் கோடிக் கணக்கான திறம் மிக்க இளம் இந்தியர்களுக்கு வழங்க வேண்டும். இந்தியா முழுவதும் இத்தகைய விளைவுகளை உருவாக்குவதற்குச் சிறந்த வழி, தமிழ்நாடு போன்ற சிறந்த செயல்பாடு கொண்ட மாநிலங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டது, மோசமான விளைவுகளைக் கொண்ட மாநிலங்களில் அந்த கொள்கைகளையும், நடைமுறைகளையும் செயல்படுத்தி அதன் மூலம் ஒட்டுமொத்த தேசிய சராசரியை மேம்படுத்துவதே ஆகும்.

சிறந்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவற்றை மற்ற இடங்களில் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு வளர்ந்த தென் மாநிலங்கள் மீது ஒரே மாதிரியாக்கும் நிகழ்ச்சி நிரலைத் திணிக்க முயல்வது புரிந்துகொள்ளவில்லை, இதனால் தேசிய சராசரி குறையும் அபாயம் உள்ளது, ஏனெனில் தோல்வியடைந்த மாதிரிகள் வெற்றிகரமான மாநிலங்களின் மீது திணிக்கப்படுகின்றன. இதற்கு மாறாக மாறாக, ஒன்றிய அரசு அதிக மக்கள் தொகை, அதிக பிறப்பு விகிதம் கொண்ட வட மாநிலங்களில் நமது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும், ஏனெனில் அவர்கள் தேசிய சராசரியை விட மிகவும் பின்தங்கியுள்ளனர். அவர்களின் தவறாக இலக்கைக்கொண்ட அவர்களின் கவனம் முழுவதுமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை, வாழ்வாதாரத்தை உண்மையில் மேம்படுத்துவதற்குப் பதிலாக பன்மைத்துவம் மிக்க அடையாளங்களை ஒடுக்கி 'ஒரே நாடு, 1.4 பில்லியன் மக்களுக்கு ஒரே நிலைப்பாடு' என்ற பிழையான , நிலையற்ற அரசியல் சித்தாந்தத்தில் மையம் கொண்டுள்ளது. ஆட்சி நிர்வாகத்திற்கு உள்ள பொறுப்புகளுக்கு மேலாக அரசியல் லட்சியத்தையே முன்னுரிமைப்படுத்துவது, பொருளாதார பேரழிவு எனும் அபாயத்தை உருவாக்குகிறது.

நான் மீண்டும் சொல்கிறேன் ஒன்றிய அரசின் முதன்மையான முன்னுரிமை என்பது குறிப்பாக அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை உயர்த்துவதாக இருக்க வேண்டும், அந்த மாநிலங்கள் இப்பருன்மைகளில் தமிழ்நாட்டை விடப் பரிதாபகரமாகப் பின்தங்கி யுள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதைப் புறக்கணிப்பதில் மேலும் கவலை அளிப்பது என்னவென்றால், இப் பின்தங்கிய மாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிவை பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட 'இரட்டைஇயந்திர அரசுகள்' ஆல் ஆளப்படுகின்றன. இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாக இருக்க வேண்டுமெனில், அனைத்து மாநிலங்களிலும் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள நாங்கள் இந்த பகுதிகளில் சிறந்த விளைவுகளை உண்டாக்க ஏங்குகிறோம், பல தசாப்தங்களாக தொடர்ந்து அதிகமான நிதி வளங்கள் உட்செலுத்தப்பட்ட




போதிலும், நல்ல விளைவுகள் இங்கு இதுவரை உண்டாகவில்லை.

இந்த மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான வேறுபாடு பொருளாதார ரீதியாக மட்டுமல்ல அது சமூக ரீதியாகவும் உள்ளது. தமிழ்நாட்டிற்கு விதிமுறைகளைத் திணிப்பதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு மேம்பட்ட சுகாதார அணுகலை ஊக்குவிப்பது, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பது (குறிப்பாகப் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது), கல்வி இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பது, திறன் மேம்பாட்டை மேம்படுத்துவது, மற்றும் உயர் கல்வியை ஊக்குவிப்பது ஆகியவற்றின் மூலமாக இந்த இடைவெளிகளை எவ்வாறு சரி செய்வது என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலம் சிறப்பாகச் செயல்பட முடியும்.



**முனைவர் பழனிவேல் தியாகராஜன்**
**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்**

ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் வற்புறுத்தல் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர் தமிழ்நாட்டை அச்சுறுத்துவது, அதன் உரிமையுள்ள நிதிகளைத் தடுத்து வைப்பதன் மூலம் ஓர் பணயக்கைதி போல நடத்துவது, போன்றவை ஒருவேளை அவர்களின் சொந்த நிர்வாகத் தோல்விகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்காகவா? இந்த அணுகுமுறை அவர்களுக்கே தோல்வியை ஏற்படுத்துகிறது. பரந்த சமூகபொருளாதார பின்னணியைப் புரிந்து கொள்ளும் எவரும் நியாயமற்ற பிரதிநிதித்துவத்தை உண்டாக்கும் தொகுதி மறுவரையறை எதிர்ப்பது, மூன்று மொழி திட்டத்தை நிராகரிப்பது, மற்றும் நமது கூட்டாட்சி அமைப்பில் மாநிலங்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை எதிர்ப்பது ஆகிய எதிர்ப்புகளின் முன்னணியில் தமிழ்நாடு ஏன் நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

குறிப்பாக, நியாயமான பிரதிநிதித்துவத்தின் மையத்தைத் தாக்கும் முன்மொழியப்பட்ட 'மறுவரையறை நடவடிக்கை' பற்றிய கவலை எங்கள் மனதில் எப்பொழுதுமே இருந்து வருகிறது. 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி இல்லை' என்ற கொள்கை மறக்கப்பட்டுவிட்டது போலேயே தெரிகிறது. தேசிய பொருளாதாரத்திற்கு, மற்ற மாநிலங்களை விட அதிகப்படியான வரியைப் பங்களித்த வருகிறபோதிலும், எங்கள் மாநிலம், பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில், அதன் விகிதாச்சார பங்கு குறைக்கப்படும் அபாயத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, பொறுப்புணர்வு மிக்க தேசிய கொள்கையான மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டதற்காக நாங்கள் இப்பொழுது தண்டிக்கப்படுகிறோம். எங்களின் நிர்வாகத்திறனையும், பொறுப்புணர்வையும் தண்டிக்கும் விதமாக, இந்நடவடிக்கை, தேசிய விவகாரங்களில், எங்களின் குரலைச் சுருக்கிவிடும். எந்த ஒரு சுயமரியாதை கொண்ட ஜனநாயகமும் ஏற்றுக்கொள்ளக்கூடாத 'அதிகமான வரிப்பகிர்வையும் குறைவான பிரதிநிதித்துவத்தையும்' நாங்கள் கொண்டிருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் இந்த பிடிவாதம், வெற்றிகரமான மாதிரிகளிலிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை என்பதையே குறிக்கிறது. இருமொழியைக்கொள்கையை அமல்படுத்தியதன் மூலம் தமிழ்நாடு பெற்ற பலன்கள், பொதுவெளியில் தெளிவாகவே உள்ளது. அதுபோலவே, எந்தவொரு கல்விக் கொள்கையும் (அல்லது இந்தியை) வெளிப்படையாகவோ அல்லது ரகசியமாகவோ திணிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்த வரலாறும் எங்கள் மாநிலத்திற்கு உண்டு. இந்த பாரம்பரியம், நீதிக்கட்சி காலத்திலிருந்தே, திராவிட இயக்கத்தின் அடையாளத்தில் ஒரு அங்கமாக இருந்துவருகிறது. 1930' களிலும், 60' களிலும், 80' களின் பிற்பகுதிகளிலும் நடைபெற்ற இதுபோன்ற பல்வேறு போராட்டங்களால் எங்கள் வரலாறு நிரம்பியுள்ளது. அடக்குமுறை தந்திரங்களுக்குத் தமிழர்கள் எப்போதும் அடிபணிந்ததில்லை.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நமது மாநில உரிமையையும், நமது மொழியையும், எல்லாவற்றிற்கும் மேலாக, நமது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தை பாதுகாப்பதிலும் மிக உறுதியாக உள்ளார். அவர் இப்பிரச்னையை, ஜனநாயக முறையில் அனைத்து தரப்பிடமிருந்தும் ஆதரவைப் பெற்றும், நாடெங்கும் பரவலாக உள்ள இந்த மனநிலையை ஒருங்கிணைத்து வழிநடத்துவதற்காக அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுவதும் என அணுகியுள்ளார். இந்த பிரச்சினைகளை ஒரு வலிமையான கூட்டணியுடன் எதிர்கொள்ள ஒரு பல்மாநில மாநாட்டை கூட்டி, ஒரு கூட்டு நடவடிக்கை குழுவை உருவாக்கியுள்ளார். தமிழ்நாடு அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படும் என்று ஒன்றிய அரசு நம்பினால், அவர்கள் தேசத்தின் மனநிலையை தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.

பிஜேபி, தனது அரசியல் லாபங்களுக்காக, ஆச்சரியபடத்தக்க வகையில், நெகிழ்வுத்தன்மையை வெளிப்படுத்திவருவது, வேடிக்கையாக இருக்கிறது. உதாரணமாக, பிரதமர் அவர்கள், 2023 ஆம் ஆண்டு, மக்களுக்கான எங்கள் நலத்திட்டங்களை "ரேவ்டி கலாச்சாரம்" என்று கடுமையாக விமர்சித்த போதிலும், அவரது கட்சி, ஒவ்வொரு மாநில தேர்தலிலும், அவைகளையே தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். பெரிதும் ஆச்சரியம் இல்லாத, ஆனால், குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவெனில், அவர்கள் தமிழ்நாட்டின் 'மகளிர் உரிமை தொகை' மாதிரியை மகாராஷ்டிராவிலும் டெல்லியிலும் பின்பற்றி, தமிழ்நாட்டை விட அதிக மாதாந்திர தொகையை வாக்குறுதியாக அளித்துள்ளனர். பின்பற்றுதல் என்பது மிக உயர்ந்த புகழ்ச்சியின் வடிவமாகும்.

தமிழ்நாட்டிலிருந்து நல்ல திட்டங்களை உள்வாங்கும் அவர்களின் இந்தப் பழக்கம் தொடரும் என்றும், வடக்கு மாநிலங்களில் உள்ள பெரிய, 'இரட்டை இயந்திர' மாநிலங்களில் கல்வி மற்றும் சுகாதார விளைவுகளை மேம்படுத்த வேண்டிய சமூக மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை இது விளைவிக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம். வேறு எந்த நடவடிக்கைகளை விடவும், இந்த மாநில இளைஞர்களின் முன்னேற்றத்தை பொறுத்தே நம் நாட்டின் எதிர்காலம் உள்ளது.

**நன்றி:**
**தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்**
17.3.2025

---

ஒன்றிய அரசின் தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

## தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 29-

ஒன்றிய அரசின் தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணா மலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எழுப்பியுள்ள கேள்விகள் வருமாறு:-

தீன் தயாள் உபாத்யாய் இளைஞர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் (கிராமீன் கௌசல்யா யோஜனா) நாட்டில் செயல்படுத்தப்படுகிறதா, அப்படியானால், தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக அதன் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக, இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற நபர்களின் விவரங்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பிட்ட காலகட்டத்தில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக, இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பெண்களின் விவரங்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை தெரிவிக்கவும். பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு திட்டம் முடிந்த பிறகு வேலைவாய்ப்புகளை வழங்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள், (மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக) என்ன?

ஆந்திரா மற்றும் தமிழ்நாடு உட்பட, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில், மேற்படி திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட பயிற்சி மையங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் பயிற்சி முறைகள் மற்றும் மேற்படி திட்டத்தின் கீழ், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகையின் விவரங்கள் தெரிவிக்கவும்.

தமிழ்நாட்டில் கிராமப்புற இளைஞர்களுக்காக மேற்கூறிய திட்டத்தின் கீழ் ஏதேனும் சிறப்புக் கல்வி அல்லது திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் (மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச வாரியாக) குறிப்பிடவும்.

தொற்றுநோய்க்குப் பிறகும், பயிற்சித் திட்டம் முடிந்த பிறகும், இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையிலும், நியமனங்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் ஏதேனும் சரிவு காணப்பட்டதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த திருத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் கும்மா தனுஜா ராணி விளக்கமாக பதிலளித்தார்.

---

மாவட்ட இளைஞர் அணி சார்பில்

## ஆம்பூரில் நாளை பொதுக்கூட்டம்!

### மருத்துவர் ஹபிசுல்லா - மகிழ்வன் சிறப்புரை!

திருப்பத்தூர், மார்ச் 29-

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நாளை (30.3.2025-ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் ஆம்பூர் பைபாஸ் ரோடு இராஜுவ்காந்தி சிலை அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல் தலைமையிலும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நா.பொ. பிரபு வரவேற்பிலும் ஆம்பூர் நகர செயலாளர் M.R.ஆறுமுகம் ஒன்றிய செயலாளர்கள் ப.ச.சுரேஷ்குமார் வி.எஸ். ஞானவேலன் க.இராமமூர்த்தி து.முரளி நகர சேர்மேன் ஏஜாஸ் அகமது மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வி.வி.கிரிராஜ் சி. எஸ்.செந்தில்குமார் டி. எஸ்.தமிழ்மணி ஆகியோர் முன்னிலையில் இந்தித் திணிப்புநிதி பகிர்வில் பரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெறும் பொதுகூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் மருத்துவர் ஹபிசுல்லா மகிழ்வன் ஆகியோர் கண்டன உரையாற்ற உள்ளார்கள்.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன் மற்றும மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் இந்த கூட்டத்திற்கு நகர ஒன்றிய வார்டு கிளை பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர்கள் கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறேன் . நன்றியுரை மு.சரண்ராஜ்.ஆம்பூர் நகர இளைஞர் அணி அமைப்பாளர்.

---

முதல்வர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும்

## டி.ஆர்.மோகனாநத்தன் தாயார் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 29 -

முதல்வர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் டி.ஆர். மோகனா நத்தனின் தாயார் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:

முதலமைச்சர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் டி.ஆர்.மோகனாநத்தன் (மோகன்) அவர்களின் தாயாரும், மறைந்த டி.எஸ். ராமசாமி அவர்களின் துணைவியாருமான திருமதி என்.எஸ். சாவித்திரி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்புத் தாயாரை இழந்து வாடும் டி.ஆர்.மோகனாநத்தன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில்

## மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை), நேரம் : காலை 10.00 மணிக்கு
இடம் : மாவட்ட கழக அலுவலகம் (கோர்ட் எதிரில்) மயிலாடுதுறை.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி